# நவீன இலக்கியங்களில் வெளிப்படும் கற்பு : அறிதலும் புரிதலும்

*பா. விஜய்*
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் மாவட்டம்
DOI: https://doi.org/10.5281/zenodo.13805627

*சிறுகதைகள் கற்பு எனும் சொல்லின் பொருளை விளக்கும் வண்ணமும், அதன் உண்மைப் பொருளை வெளிப்படுத்தவும் தொடர்ந்து முயன்று வந்தன. இவ்வகையில் சிறுகதை உலகினில் தனிப்புரட்சி செய்த எழுத்தாளர்களான புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் போன்றோர் தங்களின் சிறுகதைகளின் வழி பெண்ணுரிமைக்காக தொடர்ந்து சில சிறுகதைகளைப் படைத்திருக்கின்றனர். புதுமைப்பித்தனின் பொன்னகரம் சிறுகதையும் ஜெயகாந்தனின் அக்னிபிரவேசம் சிறுகதையும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.*

*கற்பு என்பது உடலில் இல்லை. மனதிலும், உணர்விலும் தான் உள்ளது என்பதை முன்வைத்து புதுமைப்பித்தன் எழுதிய பொன்னகரம் என்ற சிறுகதையில் மிகத் தெளிவாகக் கூறுகிறார். அம்மாளுக்கு வயது இருபது அல்லது இருபத்திரண்டு இருக்கும். அவளுடைய புருஷன் ஜட்கா வைத்திருக்கின்றான். அவர்கள் வீட்டில் ஐந்து நபர்கள் உள்ளனர். முருகேசன் நிறைய குடிப்பான். ஒருநாள் குதிரை ரேசு விட்டார்கள். முருகேசன் தண்ணியைப் போட்டுவிட்டு ரேசு சென்றதால் குதிரைக்கும் அவனுக்கும் மிகுந்த அடி வலி. முருகேசன் குடித்திருந்ததால் வலி தெரியவில்லை. வலிக்கு எதையோ அரைத்துப் போட்டாள் அம்மாளு. அதற்குப் பிறகுதான் கொஞ்சம் பேசினான். அவனுக்குப் பால்கஞ்சி வேண்டும். ஆனால் அம்மாளுக்கு கூலி போட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசு இல்லை. அப்போது அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள். அங்கு சந்தின் பக்கத்தில் ஒருவன். அவன் அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகவே கண் வைத்திருந்தவன்.'' இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம் புருஷனுக்கு பால்கஞ்சி வார்க்கத்தான்.*

*இச்சிறுகதை, கற்பை முன்னெடுத்துப் பேசிய சிறுகதைகளில், இன்று வரை ஒரு சிறந்த சிறுகதையாக நவீன இலக்கியங்களில் பயணித்து வருகின்றது. கற்பு என்பது திருமணம் ஆவதற்கு முன்பும் சரி திருமணமான பின்பும் சரி பெண்ணின் உடலில் தான் கற்பு உள்ளது என்று பேசி வந்த சமூகத்திற்கு ஒரு சாட்டையடியாக இந்தச் சிறுகதை உள்ளது. கணவனின் உடல் நிலையைச் சீராக்க வேண்டிய உணவினைக் கொடுக்கக்கூடிய வசதி இல்லாத நிலையில், கணவனும் மனைவியும் இணைந்து வாழும் இல்வாழ்க்கையில் ஒருவரின் துயரை மற்றொருவர் போக்கி, இன்பம் துன்பம் என இரண்டையும் பகிர்ந்து வாழ்தலே கற்பு என்பதை உணர்த்தும் வகையில் இச்சிறுகதை அமைந்துள்ளது. உடல் நலம் கெட்டு வீட்டில் இருக்கும் போது அவரின் உடல் நிலையைச் சீராக்க வேண்டிய பொறுப்பு அவர் மனைவி அம்மாளுக்கு உண்டு. இவ்வகையில் தன்னுடைய கணவனின் உடல் நிலையை சீராக்க பால்கஞ்சி' கொடுக்க வேண்டும் என மருத்துவர் கூறினார். அவள் மேல் நீண்ட நாட்களாக ஒரு ஆணுக்கு ஒரு ஈர்ப்பு உண்டு. அன்று மாலை அம்மாளு தண்ணீர் எடுக்கச் செல்லும் பொழுது அந்த ஆணுடன் மறைகிறாள் அம்மாளு.*

***“இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்துவிட்டாள்”[1]***

*இந்த இடத்தில் அம்மாளு அந்த ஆணுடன்*

இணைந்து அப்பணத்தை ஈட்டுகின்றாள். அவ்வாணுடன் இணைந்தவுடன் கற்பு போய்விடாது. தன் கணவனின் உயிரினைக் காக்கும் பொருட்டு அம்மாளு அவ்வாறு அந்த ஆணுடன் இணைகிறாள். உணர்வு ரீதியில் அவள் மனதில் தன் கணவனை மீட்க வேண்டும் என்ற எண்ணமே அவ்விடத்தில் மேலெழுகின்றது. கணவனின் உயிரினைக் காக்கும் பொருட்டு அவளின் மனம் அந்த ஆணுடன் இணைந்தாவது தன் கணவனின் உயிரினைக் காக்க வேண்டும் என உணர்வு மேலெழுதலே இவ்விடத்தில் கற்பு எனலாம். குறிப்பாக இக்கதை எழுதப்பெற்ற காலத்தில் மக்களின் சிந்தனையை திசைதிருப்பிய ஒரு சி றுகதையாக பொன்னகரம் இருந்திருக்கிறது.

**"என்னமோ கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா பொன்னகரம்!"[2]**

கற்பு என்ற கற்பிதத்தை ஒரு பெரிய செய்தியாக வைத்து சமூகத்தில் சொல்லித் திரிபவர்கள் உணரும் வகையில் இக்கதை அமைகின்றது. தன் கணவனின் உயிரினைக் காப்பதே மனையானவளின் கடமை, அதுதான் கற்பு, அதுவே இல்வாழ்க்கை. பொன்னகரம் என அவ்வுரைக் குறிப்பிட காரணம் அக்கால சூழலில் ஒரு பெண் துணிந்து தன் கணவனின் உயிரினைக் காக்கும் பொருட்டு வேறொரு ஆணுடன் இணைகிறாள் என்பது அக்கால சூழலில் பெரியசெயல். இதனை அம்மாளு துணிவுடன் செய்து தன் கணவனின் உயிரைக் காக்கிறாள் என்பதே தனிச் சிறப்பிற்குரியது. இதனாலே அவ்வுர் பொன்னகரம் என அழைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறேன்.

பொதுவாக இக்கதையின் மூலம் கற்பு என்ற வேலி உடல் என்னும் களத்தின் மேல் போடப்பட்டிருக்கிறது. என்பதை அறிகின்றோம். அவ்வேலியைத் தாண்டா அடிமைப்பெண்ணாக இல்லாமல் உடலில் என்னைய்யா கற்பிருக்கிறது. ஒருவரின் துயரைப் போக்க மற்றொருவர் தான் துடிக்க வேண்டும். அவ்வாறு தன் கணவனின் உயிரினைக் காக்க அம்மாளு செய்த செயலே அவளின் கற்பை உறுதி செய்வதாக நினைக்கின்றேன். உணர்வினை அடிப்படையாகக் கொண்டு அம்மாளு செய்த செயலை சாதாரணமான கண்ணோட்டத்தில் பார்ப்பவர்களுக்கு ஒழுக்க சீர்கேடாகவே தெரியும். ஆனால் அம்மாளு கற்புடைய பெண் என கருதக்கூடியவள். மறைமுகமாக இக்கதை கற்பு என்பது உடலில் இல்லை மனதில் உள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. இதுபோன்ற பல சிறுகதைகள் கற்பினைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளன.

ஜெயகாந்தன் எழுதிய பல சிறுகதைகள் வாசக வட்டாரங்களைத் தடுமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. இவரின் அக்னி பிரவேசம் என்ற சிறுகதை ஒரு மாறுபட்ட கதைக்களத்தைக் கொண்டுள்ளது. ஒரு ஆண் ஒரு பெண்ணைக் காட்டிலும் மிகவும் சுதந்திரமாகவும் எவ்வித சுயகட்டுப்பாடுகளும் இல்லாதவளாகவும் இருக்கும் விதத்தை இக்கதை எடுத்தியம்புகிறது. பெண்ணானவள் ஒரு உணர்வுடைய சுய விருப்பம் கொண்டவள் என்பதை ஆண் உணராத விதம் தெரிகின்றது. பொதுவாகப் பெண்களை ஆண்களின் விருப்பத்திற்கு இணங்கும், தங்கள் இச்சைகளை தீர்த்துக்கொள்ள பயன்படுத்திக் கொள்ளும் ஒரு பொருளாகப் பார்க்ககூடியவர்களாக சில ஆண்கள் இருக்கின்றனர். அவ்வகையில் இக்கதையில் வரும் ஆண்,

**"ஆம். அடிமை! - உணர்ச்சிகளின் அடிமை!"[3]**

என்று அவன் குறிப்பிடுகிறான். உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே கற்பு என்றும், உணர்வு ரீதியில் பிறருக்குத் துன்பம் தராதவனாகவும் இருப்பதே சிறந்தது என்பதை உணருதல் வேண்டும். அவன் செய்த செயல் அப்பெண்ணை உணர்வு ரீதியில் பாதிக்கச் செய்திருக்கலாம். தங்கள் சுய உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆர்வம் காட்டுபவர்கள் பிறர் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஒரு ஆணினால் தவறான செயல் நடந்தாலும் அதில் பாதிக்கப்பட்ட பெண்ணே குற்றவாளியாகக் காட்டப்படுகிறார்.

"இவளை என்ன செய்யலாம்? ஒரு கௌரவமான குடும்பத்தையே கறைபடுத்திட்டாளே"[4] என்று அப்பெண்ணின் தாய் கூறுகின்றாள். இந்நிகழ்வில் அப்பெண் பாதிக்கக் காரணம் அந்தக் காரில் வந்த ஆண். ஆனால் அவனைக் காட்டிலும் அப்பெண்ணின் தாய் தன் மகளையே தண்டிக்கிறாள்.

ஆண் வர்க்கத்தினைக் குறிப்பாக அப்பெண்ணை தன் இச்சைக்கு பயன்படுத்திக் கொண்டவனை கூட தண்டனைக்குள்ளாக்க அக்குடும்பம் முன்வராத நிலையே பெண்ணடிமைத்தனத்தை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. உடலளவில் கற்பை காணும் இச்சமூகத்தில் அப்பெண் கற்̓பை இழந்தவளாகவே காணப்படுவாள். ஆனால் உணர்வு ரீதியில், மனதளவில் அவள் வெகுளியாகவும் குற்றவாளியாகவும் இருக்கின்றாள். அவள் கற்புடன் தான் இருக்கிறாள் என்பதே என் கருத்தாக நான் எண்ணுகின்றேன். உடலிலும், உணர்விலும் கற்பிழந்தவன் அந்த ஆண்தான். தான் செய்த தவறை ஆண் உணர்ந்து வருந்தாத போது பெண் ஏன் வருந்த வேண்டும். இவ்வாறு அக்னிப்பிரவேசம் கதை கற்பைப் பற்றிப் பேசக்கூடிய கதையாகவும் அமைந்துள்ளது.

எனவே, கற்பு என்பது ஒரு நபரின் உடலில் இல்லை. மாறாக மனித மனங்களின் தூய்மையிலேயே கற்பினை காண்பது நலம் பயக்கும். மனதன் சக மனிதனின் உணர்வுகளை மதித்து நடந்துக்கொண்டாலே சமூகத்தில் பல்வேறு அடிமைத்தனைகள் விளகும் என்பது நிதர்சனம்.

## சான்றெண் விளக்கம்

1. புதுமைப்பித்தன். புதுமைப்பித்தன் சிறுகதைகள், ப.3.
2. மேலது. ப.3.
3. ஜெயகாந்தன். த. ஜெயகாந்தன் சிறுகதைகள், ப.16.
4. மேலது. ப.19.

## துணைநூற் பட்டியல்


1. புதுமைப்பித்தன். புதுமைப்பித்தன் சிறுகதைகள், நியு செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், முதற்பதிப்பு, 2003.
2. ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறு கதைகள், நேஷனல் புக் டிரஸ், முதற்பதிப்பு -1973.